# TAVIS என்றால் என்ன?

- TAVIS என்பது **ரொறன்ரோ வன்முறைக்கெதிரான தலையீட்டு உபாயமாகும்.** இது ரொறன்ரோ சுற்றுப்புறத்தில் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கத்துடனான ஓர் தீவிரமான வன்முறை குறைப்பு மற்றும் சமூக தயார்படுத்தலுடனான ஈடுபாட்டு முன்னெடுப்பு ஆகும்
- TAVIS ஆனது ரொறன்ரோ பொலிஸ் சேவையால் முன்னெடுக்கப்படுகின்றது. இதன் பங்காளர்களாக, ரொறன்ரோ சமூக வீடமைப்பு மற்றும் ரொறன்ரோ நகர திணைக்களங்களான பூங்காக்கள், வனவளமும் பொழுது போக்கும், ரொறன்ரோ பொது சுகாதாரம், சமூக அபிவிருத்தி, நிதியும் நிர்வாகமும், பங்குதாரர்களின் ரொறன்ரோ அலுவலகமும் ஏனையனவும் உள்ளடங்குகின்றன.

## எவ்வாறு இது வேலை செய்கின்றது?

- TAVIS ஆனது 3 கட்டங்களாக இயங்குகின்றது.
  1. அதிகரித்த வன்முறை நடவடிக்கைகளை அனுபவிக்கும் பிரதேசங்கட்கு மேலதிக ரொறன்ரோ பொலிஸ் சேவை அலுவலகங்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.
  2. சுற்றுப்புறம் பாதுகாப்பாக இருக்கும்போது, 'பராமரிப்பு மட்ட' அமுலாக்கலானது அதிகரித்த பொலிஸ், நகரம் மற்றும் சமூக அங்கத்தவர்களின் கூட்டுச் செயற்பாட்டுடன் தொடர்கின்றது; மற்றும்
  3. 'சாதாரணமாக்கப்பட்ட' பொலிஸ் சேவையானது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட சமூகத்திற்கு ஆதரவாக வழங்கப்படுகின்றது.

- TAVIS இன் ஓர் பிரதான பகுதியானது சமூக அங்கத்தவர்களுடனான ஈடுபாடாகும். இது குற்றத்தின் அடிப்படைக் காரணங்களுடன் மிக திறமையாக கையாளுவதற்கு அத்தியாவசியமான ஓர் ஆதரவு தொகுதியாக மாறுகின்றது.
- TAVIS இன் வெற்றி கைது செய்தல் எண்ணிக்கையில் தங்கியிராது, மாறாக குற்றங்கள் குறைதல், பொதுமக்களின் பொறுப்பும் நம்பிக்கையும் விரிவாகல் மற்றும் வன்முறையால் அதிகளவில் பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே உறவுகளை கட்டியெழுப்பல் ஆகியவற்றில் தங்கியிருக்கும்.

## எனது சுற்றுப்புறத்தில் TAVIS உத்தியோகத்தர்களை நான் காண்பேனா?

- TAVIS ஆனது ஓர் நகர முழுமையுமான உபாயமாகும். அத்துடன் TAVIS இற்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை அதிகரித்த வன்முறையான குற்றச் செயல்களை அனுபவிக்கும் ரொறன்ரோ சுற்றுப்புறத்தில் காணலாம்.

## TAVIS சுற்றுப்புற முன்னெடுப்பு என்றால் என்ன?

- மூன்றாவது வருடத்தில், கோடை மாதங்களில், மேலதிக TAVIS உத்தியோகத்தர்கள், உச்ச அளவிலான வன்முறையை அனுபவிக்கும் சுற்றப்புறங்கட்கு ஒதுக்கப்படுவர். இந்த கோடையில், பிரிவு 23 இன் அல்பியன் - ∴பின்ஞ் பகுதி, பிரிவு 31 இன் ஜேன் - ∴பின்ஞ் பகுதி, பிரிவு 43 இன் ஸ்காபரோ கிராம பகுதி ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.
- குற்ற போக்கு பகுப்பாய்வு, நிகழ்வுகளின் வரைபடம், மற்றும் சமூகத்துடனான ஆலோசனைகளின் அடிப்படையில் இந்த சுற்றுப்புறங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்களின் பருமனிற்கு பொருத்தமற்ற விதத்தில் குற்றவியல் செயற்பாடுகளை இவை அனுபவிப்பதன் காரணமாகவே இந்த பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**Tavis ஐ பற்றி மேலதிகமாக அறிவதற்கு, எந்தவொரு ரொறன்ரோ பொலிஸ் நிலையத்தையும் 416-808-2222, அல்லது** சார்ஜன்ட் ஜெவ் பியர்சன், ரொறன்ரோ பொலிஸ் சேவை TAVIS ஒருங்கிணைப்பாளரை 416-808-7736 இலும், பிரென்டன் நோளன், ரொறன்ரோ நகரம், சமூக அபிவிருத்தி, நிதி மற்றும் நிர்வாகம், அவர்களை 416-392-5398 இலும் ஜெவ் ∴பிரயர், ரொறன்ரோ சமூக வீடமைப்பு, அவர்களை 416-981-4252 இலும் தொடர்பு கொள்ளவும்.

*Tamil translated version*